தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம்

செய்தி வெளியீட்டு எண்: 60/2021 நாள்: 09.11.2021

**20.11.2021 முற்பகல் மற்றும் பிற்பகல் மற்றும் 21.11.2021 முற்பகலில் நடக்கவுள்ள ஒருங்கிணைந்த நிலவியலாளர் சார்நிலைப் பணிகள் பதவி 2021 -ற்கான எழுத்துத் தேர்வு (கொள்குறிவகை)**

**செய்திக்குறிப்பு**

தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையத்தின் அறிவிக்கை எண்: 12/2021, நாள் 25.08.2021-ன் வாயிலாக அறிவிக்கை செய்யப்பட்ட **ஒருங்கிணைந்த நிலவியலாளர் சார்நிலைப் பணிகள் பதவி 2021 -ற்கான எழுத்துத் தேர்வு (கொள்குறிவகை)** 20.11.2021 (முற்பகல் மற்றும் பிற்பகல்) மற்றும் 21.11.2021 (முற்பகலில்) சென்னை மாவட்ட தேர்வு மையத்தில் மட்டும் நடைபெற உள்ளது.

தேர்வு எழுத அனுமதிக்கப்பட்ட விண்ணப்பதாரர்களின் தேர்வுக்கூட நுழைவு சீட்டுகள் (Hall Ticket) தேர்வாணையத்தின் இணைய தளமான www.tnpsc.gov.in மற்றும் www.tnpscexams.in-ல் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது. விண்ணப்பதாரர்கள் தங்களுடைய ஒருமுறை பதிவேற்றம் (OTR) மூலமாக மட்டுமே விண்ணப்ப எண் மற்றும் பிறந்த தேதியை உள்ளீடு செய்து தேர்வுக்கூட நுழைவு சீட்டினை (Hall Ticket) பதிவிறக்கம் செய்ய முடியும்.

மேலும் விண்ணப்பதாரர்கள் கீழ்கண்ட அறிவுரைகளை கவனமாக குறித்துக் கொள்ளவும்:

அ. தேர்வர்கள் விடைத்தாளில் விவரங்களை பூர்த்தி செய்யவும் விடைகளை குறிக்கவும் **கருப்பு நிற மை பந்து முனை பேனா** மட்டுமே பயன்படுத்த வேண்டும் தவறினால் அவ்வாறான விடைத்தாள்கள் தேர்வாணையத்தால் செல்லாததாக்கப்படும்.

ஆ. எந்த ஒரு தேர்வரும் முற்பகலில் நடைபெறும் தேர்விற்கு 09.15 மணிக்குப் பின்னர் தேர்வுக்கூடத்திற்குள் நுழையவோ 1.15 மணிக்கு முன்னர் தேர்வுக்கூடத்திலிருந்து வெளியேறவோ அனுமதிக்கப்படமாட்டார்கள். எந்த ஒரு தேர்வரும் பிற்பகலில் நடைபெறும் தேர்விற்கு 2.15 மணிக்குப் பின்னர் தேர்வுக்கூடத்திற்குள் நுழையவோ 5.15 மணிக்கு முன்னர் தேர்வுக்கூடத்திலிருந்து வெளியேறவோ அனுமதிக்கப்பட மாட்டார்கள்.

...2

இ. விண்ணப்பதாரர்கள் தமக்கு ஒதுக்கப்பட்ட தேர்வுக்கூடம் அமைந்துள்ள இடத்தினை எளிதில் தெரிந்துகொள்ளும் பொருட்டு தேர்வுக்கூட நுழைவுச்சீட்டில், விரைவுத்தகவல் குறியீடு (QR CODE) அச்சிடப்பட்டுள்ளது. இதனை விரைவுத்தகவல் குறியீட்டு செயலி மூலம் ஸ்கேன் செய்து தேர்வுக்கூடம் அமைந்துள்ள இடத்தினை Google Maps மூலமாக தெரிந்து கொண்டு பயன் பெறலாம்.

ஈ. தேர்வு அறைக்குள் அலைபேசி மற்றும் வேறு ஏதேனும் மின்னணு உபகரணங்கள் கொண்டுசெல்ல அனுமதியில்லை. எனவே விண்ணப்பதாரர்களுக்கான அறிவுரைகளில் பத்தி எண் 17 (A) (iv) ல் உள்ள குறிப்பின்படி தங்களது அலைபேசி உட்பட பிற உடமைகளை தேர்வுமையத்திலுள்ள பாதுகாப்பு அறையில் ஒப்படைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். இருப்பினும் சொந்த உடமைகளை பாதுகாப்பு அறையில் வைப்பது தேர்வரின் சொந்த பொறுப்பிற்குட்பட்டதாகும்.

கிரண் குராலா இ.ஆ.ப.,
தேர்வுக்கட்டுப்பாட்டு அலுவலர்

## TAMIL NADU PUBLIC SERVICE COMMISSION

**Press Release No: 60/2021** **Dated: 09.11.2021**

## COMBINED GEOLOGY SUBORDINATE SERVICE WRITTEN (OBJECTIVE TYPE) EXAMINATIONS TO BE HELD ON 20.11.2021 FN & AN AND 21.11.2021 FN

## PRESS RELEASE

Commission's Notification No.12/2021 dated: 25.08.2021, for direct recruitment to the post included in Combined Geology Subordinate Service Examination in various department is scheduled to be held on 20.11.2021 FN & AN and 21.11.2021 FN in Chennai District Centre only.

The memorandum of admission (Hall Ticket) for the admitted candidates has been hosted in the Commission's website www.tnpsc.gov.in and www.tnpscexams.in. The memorandum of admission (Hall Ticket) can be downloaded through one time Registration (OTR) of the candidate by entering the Application Number and Date of Birth.

**Further candidates shall note the following instructions carefully:**

a. Candidates should use **only Black colour Ink Ball point pen** for filling the particulars and shading the answer fields in the answer sheet, failing which answer sheet will be invalidated.

b. No Candidate will be allowed to enter the examination hall after 9.15 A.M. and leave the examination hall before 1.15 P.M. for the examination conducted in forenoon session and No Candidate will be allowed to enter the examination hall after 2.15 P.M. and leave the examination hall before 5.15 P.M. for the examination conducted in afternoon session.

c. For the benefit of the candidates a QR code depicting the geographical position of the examination venue as been printed in the Memorandum of Admission (Hall Ticket), which may be scanned using any QR code Reader App to locate the examination venue in Google Maps.

d. Mobile phones and any other electronic devices are not allowed in the examination room. The candidates are therefore instructed to handover their belongings including mobile phones in the cloakroom as per Para 17(A)(iv) of instructions to applicants. However, the deposition of personal belongings in the cloakroom shall be at the risk of the candidates.

Kiran Gurrala, I.A.S.,
Controller of Examinations